**கொழும்பு மாநகர சபை - 2022**

**-------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

கொழும்பு மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கொழும்பு மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 மறுக்கப்பட்ட அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் மறுக்கப்படகிறது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6 பந்தியின் 1.6.1 (ii) அவதானிப்புக்கள் தவிர கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

| | உரிய நியமங்களுடனான இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நியமத்தின் 3.20 பந்தியின் பிரகாரம் அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் பன்னிரண்டு மாதங்களினுள் பொறுப்பு தீர்பனவு செய்ய இருக்கையில் நிறுவனமொன்று நடைமுறை பொறுப்பாக வகைப்படுத்த வேண்டிய போதும் சபையினால் 2023 ஆண்டினுள் செலுத்த வேண்டிய ஆசியா அபிவிருத்தி வங்கி கடன் தவணைகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 201,632,572 இனை நடைமுறை பொறுப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடன் உடன்படிக்கை பிரகாரம் 2023 ஆண்டு முதல் செலுத்த வேண்டிய கடன் தொகைகளிலிருந்து கிட்டிய அடுத்த வரும் ஆண்டிற்கான தவணையை நடைமுறை பொறுப்பாகவும் எஞ்சியவற்றை நடைமுறை அயல்லாத பொறுப்பாகவும் இனங்காணுவதாக. | கணக்கீட்டு நியமித்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்படும்வாறு ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களை பெறுமானத்தேய்வு செய்ய வேண்டிய போதும் நியமத்தின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியன்று சபையின் நிதிக்கூற்றக்களினுள் உள்ளடங்கப்பட்டுள்ள ரூபா 25,918,446,539 ஆன ஆதனங்கள் | உரிய கிரயத்துடன் நாளாதுவரையான சொத்தக்கள் பதிவேடொன்று சபையிடம் இல்லாததால் சொத்துக்களின் மீள்மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மீள்மதிப்பீட்டு பெறுமானத்தின் மீது நாளாதுவரையாக நிலையான சொத்துக்கள் | கணக்கீட்டு நியமித்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமானத்தேய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிவேடொன்றை தயாரித்து, அப்பெறுமானங்களை 2023 ஆண்டில் இறுதி கணக்குகளிற்கு உள்ளடக்கி 2024 ஆண்டு முதல் சொத்துக்களை பெறுமானத்தேய்வு செய்வதற்கும், நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதையும் மேற்கொள்ளப்படுவதாக. | |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | மத்திய அரசினால் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் பெற்றுக் கொண்ட டொலர் மில்லியன் 231.52 ஆன கடன் தொகையை பயன்படத்தி கொழும்பு மாநகர சபையின் மலசல வடிகால் தொகுதியை மேம்படுத்துவதற்காக 2022 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 23,209,967,369 தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் ரூபா 19,971,109,470 ஆன தொகையை கணக்கீடு செய்ய அல்லது வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்காததுடன் கொழும்பு மாநகர சபையினால் மீள் செலுத்த உடன்பட்டுள்ள ரூபா 3,238,871,899 இனை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023.05.25 திகதிய கலந்துரையாடலின் பிரகாரம் 2023 ஆண்டில் தேவையான செம்மையாக்கலை சமர்பிப்பதாக. | கணக்கீட்டு நியமம் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தாயரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கொழும்பு மாநகர சபைக்கு மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சிடமிருந்து 13 புதிய தீயணைப்பு வண்டிகள் கிடைத்த காரணத்தால் கொழும்பு மாநகர சபையினால் பயன்படுத்த வந்த கூட்டுத் தொகை ரூபா 123,105,831 ஆன 15 தீயணைப்பு வண்டிகளை ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களிற்கு ஒப்படைத்திருந்த போதும் அதற்குரிய பெறுமதியை மோடார் வாகன கணக்கிற்கு செம்மையாக்கி இருக்கவில்லை. | ஒப்படைத்த வாகனங்களின் சரியான கிரயத்தை கண்டறிய முயாதமை சில வாகனங்களை சபையின் சொத்துக்ளிற்கு உள்ளடக்காத பிரச்சினையை தீர்த்துக் கொண்டு 2023.12.31 திகதி நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்கும் வரை 2022 இறுதி கணக்குகளில் குறிப்பொன்றினூடாக வெளிப்படுத்தியுள்ளதாக. | கணக்கீட்டு நியமம் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தாயரிக்க வேண்டும். |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிதிக்கூற்றுகளின் குறிப்பு இலக்கம் 18 கீழ் ரூபா 5,892,897,771 தொகை மோட்டார் வாகனங்களின் பெறுமதியாக குறிப்பிட்டிருந்ததுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் பதிவேடு பிரகாரம் அவற்றின் பெறுமதி ரூபா 4,122,824,893 ஆனது. அதன் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதி நிதிக்கூற்றுக்கள் மற்றும் மோட்டார் வாகன பதிவேடு பிரகாரம் மோட்டார் வாகனங்களின் பெருமதிக்கிடையில் ரூபா 1,965,920,343 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு குழுவின் ஊடாக இந்த வித்தியாசத்திற்கு காரணங்களை வெளிப்படுத்திக் கொண்டு அடுத்த வரும் ஆண்டின் நிதிக்கூற்றுகளின் ஊடாக சீராக்கம் செய்வதாக. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் அட்டவணைகிடையில் வித்தியாசத்தை நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதேயே இனங்கண்டு சரியாக வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட வீதவரி பொழிப்பு அறிக்கையை தயாரிப்பதற்காக பயன்படுத்தி இருந்த விரிவான அறிக்கைகளில் உள்ளடங்கிய தொங்கல் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 34,609,149 ஆனது. அப்பெறுமதியிலிருந்து இனம் காணப்பட்ட மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்காது 2022 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய வீதவரி கூட்டுப் பெறுமதி ரூபா 4,316,776,152 ஆன கணக்கீடல் சரயானதாக இருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 திகதிக்கு வீதவரி பொழிப்பு அறிக்கையில் தொங்கல் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,230,844.32 ஆனது.<br><br>வங்கி ஊடாக நேரடியாக செலுத்தும் போது வீதவரி செலுத்தும் ஆதனங்கள் தொடர்பான சரியான தகவல்களை இனங்காண முடியாத சந்தர்ப்பங்களில் சரியான ஆதன இலக்கங்களை இனம் காணும் வரை அந்த வீதவரி பெறுமதி தொங்கல் கணக்கிற்கு உள்ளடங்கப்படுகிறது. வீதவரி வருமானமாக கணக்கீடு செய்துள்ள அந்த வருமானத்திலிருந்து 2022 ஆண்டு இறுதி வரை தொங்கல் கணக்கில் நிலவிய பெறுவனவுகளில் இருந்து 58 ஆவனங்கள் (ரூபா 1,171,796.75) இனம் காணப்பட்டு சரியான தனிநபர் கணக்குகளுக்கு சீராக்கி உள்ளதுடன் எதிர்காலத்தினுள் எஞ்சிய தொங்கல் வீதிகளின் பெறுமதியையும் இனம் காண்டதன் பின்னர், குறித்த தனிநபர் மீதிகளை கணக்குகளுக்கு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக மற்றும் வீதவரி செலுத்தாததன் மீது மாநகர சபை கட்டளை | தொங்கல் மீதிகளை விரைவில் இனங்கண்டு கணக்கருகளை நாளாதுவரையாக் கவும் நிலுவை வீதவரி தொடர்பாக மாநகர சபை கட்டளைச் சட்டம் பிரகாரம் நடவக்கை எடுத்தலும் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சட்டத்தின் பிரகாரம் ஆதன தடை செய்யும் போது இந்த கொடுப்பனவுகளுக்கு உரிய பிரச்சனைகள் ஏற்பட முடியுமாகையால் இந்த கணக்கை நடாத்திச் செல்ல வேண்டியதாக. | |
| (இ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தொகுதி பொழிப்பு அறிக்கை பிரகாரம் சொத்துக்களின் பெறுமதி ரூபா 7,344,181,805 ஆனதுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதிக்கு நிதிக்கூற்றுகளின் பிரகாரம் கூட்டுப் பெறுமதி ரூபா 25,918,446,539 ஆனது. அதன் பிரகாரம் ரூபா 18,574,264,734 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சொத்துக்கள் வகைப்படுத்த ஒரு விதத்திற்கும் கணனி தொகுதி பயன்படுத்தி பெற்று சொத்துக்கள் வகைப்படுத்தல் இன்னும் ஒரு விதத்திற்கு சமர்ப்பித்திருந்தது. | சொத்துக்கள் வகைப்படுத்தலில் பிரச்சினை நிலவியதாக இணங்குவதுடன் கணனி மென்பொருல் தொகுதி ஊடாக பெற்றுக்கொள்ளும் பொழிப்பறிக்கைக்கு ரூபா 15,515,316,349 ஆன சொத்தக்கள் சேர்க்கப்பட வேண்டும். அப்போது உங்களால் சுட்டிக்காட்டிய வித்தியாசத்தை விட குறைந்த வித்தியாசமொன்று (ரூபா 3,058,948,385) அவதானிக்கப்ட்டது. என்னவென்று LAIN ஊடாக தொகுதிப்படுத்தப்படும் நிலையான சொத்துக்கள் மாத்திரம் உங்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணனி மென்பொருல் தொகுதி மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பொழிப்பு அறிக்கையில் உள்ளடங்கப்பட்டள்ளதாக. | சொத்துக்கள் முகாமைத்துவ தகவல் தொகுதியை நாளாதுவரையாக்கி கணக்காய்விற்கு புலனாய்வு செய்வதற்கான (Review Only) வசதிகளை வழங்குவதனை செய்துதர வேண்டும். |

**1.6.4 கணக்காய்விற்கு ஆவன ரீதியான சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | சொத்துக்கள்<br>பொறுப்புக்கள்<br>செலவுகள்<br>வருமானங்கள் | 35,847,745,839<br>10,988,421,308<br>10,534,394,892<br>13,440,288,669 | கொழும்பு மாநகர சபையின் அனைத்து கணக்கீட்டு நடவடிக்கைகளும் Municipal Council Accounting System (MCAS) பெயரில் கணனி தொகுதி ஒன்றில் பேணிச் செல்லவதாக பொதுப் பேரேட்டை மென் பிரதியாக கணக்காய்விற்கு சமர்ப்பித்த போதும் தொகுதிக்கு பிரவேசத்திற்கு (Review Only) தேவையான வசதிகள் வழங்கப்படாத காரணத்தால் தொகுதியில் உள்ள தகவல்களின் | விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | கணக்காய்விற்கு தேவையான உறுதிப்படுத்தல்களிற்காக தடையின்றி கணனி தொகுதிக்கு பிரவேசிக்க மற்றும் புலனாய்வு செய்வதற்கு (Review Only) சந்தர்ப்பத்தை வழங்க வெண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | சரியான தன்மை மற்றும் தொகுதி கட்டுப்பாடு தொடர்பாக உறுதி செய்து கொள்ள முடியாமல் போனதால் ரூபா 35,847,745,839 ஆன் சொத்துக்கள் மற்றும் ரூபா 10,988,421,308 பொறுப்புக்களை ஒப்பாய்வு செய்யவும் ரூபா 10,534,394,892 ஆன செலவுகளை மற்றும் ரூபா 13,440,288,669 ஆன வருமானங்களை சான்றுதி செய்வதற்கு முடியாமல் போனதால் கணக்காய்வு விடயப் பரப்பு மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. | | |
| (ஆ) | இருப்பு | 679,292,707 | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதிக்கு இருப்பு பெறுமதி ரூபா 679,292,707 ஆனது. இருப்பு கணிப்பீட்டிற்காக பொருத்தமான கணிப்பீட்டு சபை ஒன்றை நியமிக்காததுடன் இருப்பு கணிப்பீட்டிற்கு முன்னர் கணிப்பீடு செய்யும் திகதி பற்றி கணக்காய்வாளர் அறிவுறுத்தப்படாததால இருப்பு பெறுமதியை ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | 2023 ஆண்டின் இருப்பு கணிப்பீடு மேற்கொள்ளப்படும் திகதி பற்றி கணக்காய்வாளரை அறிவுறுத்துவ உடன் ஏனைய சரிசெய்தல்களை மேற்கொள்ள குறித்துக் கொண்டதாக. | கணக்காய்விற்கு தேவையான உறுதிப்படுத்தல்களிற்காக எதர் வரும் இருப்பு கணிப்பீட்டிற்கு முன்னர் கணக்காய்வாளைர அறிவூட்டி கணப்பீடு செய்யும் திகதி பற்றி இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்று | 685,620,542 | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த தேறிய கபசுப்பாய்ச்சலை கணிக்கும் போது ரூபா 685,620,542 ஆன மிகை மற்றும் பற்றாக்குறை கணக்கின் சீராக்கம் ஆகவும், மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் கடந்த ஆண்டின் தவறுகளாக ரூபா 682,562,364 இனை திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்திருந்த போதும் அப் பெறுமதியை கணக்கிட்ட முறை மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் தன்மை தொடர்பாக விரிவான | கொடுக்கல் வாங்கல் எண்ணிக்கை பாரியதானமை, தொடர்புபடும் பிரிவுகளின் எண்ணிக்கை பாரியதானமை காரணமாக கொடுக்கல் வாங்களின் கொடுக்கல் வாங்களிற்கு வேறாக பகுப்பாய்வு செய்து காசுப் பாய்ச்சல் நிலவியதா இல்லையா என இனங்காண்பது | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் மற்றும் கணக்காய்விற்கு தகவல்களை சமர்பிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அட்டவணையொன்றை கணக்காய்விற்கு சமர்பிக்காததால் அப் பெறுமதியை கணக்கிட்டதன் சரியான தன்மையை உறுதி செய்ய முடியவில்லை. | கடினமாகும். அவ்வாறே தற்போது பயன்படுத்தப்படும் கனணி தொகுதி (MCAS) ஊடாகவும் நேரடியாக இனங்காண முடியாது. திணைக்கள மட்டத்தில் பொழிப்பு அறிக்கையொன்றை சமர்பிக்க குறித்துக் கொண்டதாக. | |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு நிதிப்பிரமாணம் மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதி சுற்றறிக்கை 01/2020 | | | |
| (அ) | நி.பி 396 (ஈ) | விநியோகிக்கப்பட்ட போதும் 06 மாத் காலத்தினுள் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 28,159,481 பெறுமதியான 548 காசோலைகள் தொடர்பாக நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த காசோலைகளில் இருந்து ரூபா 9,155,741 பெறுமதிக்குரிய காசோலைகளை தீர்த்துள்ளதுடன் எஞ்சிய காசோலைகளை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக. | 06 மாத காலத்தினுள் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 03/2018 மற்றும் 2018 பெப்ரவரி 20 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 2II பந்தி | பதில் கடமை போன்ற மாற்று செயற்பாடுகளால் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் அலுவலர்களைக் கொண்டு மேற்கொள்ள முடியாது | 60 வயது பூர்த்தி ஆனதன் மீது பதில் கடமை நகர மதிப்பீட்டாளர் ஓய்வு பெற்றதுடன் அவ் உத்தியோகத்தரையே | மீண்டும் நியமிப்பதற்காக ஆளுநருக்கு பரிந்துரை அனுப்பும் போது சுற்றறிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போன தேவையான முக்கிய பதவிகளுக்கு மாத்திரம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டிய போதும் தகுதி வாய்ந்த ஆறு அலுவலர்கள் இருக்கும் போது மேல் மாகாண ஆளுநரின் இலக்கம் GOS/ADM/13/5/24 மற்றும் 2023 சனவரி 03 ஆம் திகதிய கடிதம் மூலம் ஓய்வுபெற்ற அலுவலர் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் 03 மாத காலப் பகுதிக்காக பிரதி நகர மதிப்பீட்டாளர் II தரத்திற்கு நியமித்து படிகள் செலுத்தப்பட்டு இருந்தது | மதிப்புக்குரிய ஆளுநரின் அங்கீகாரம் மீது 3 மாத காலத்திற்காக பிரதி நகர மதிப்பீட்டாளராக நியமித்து கடமை மேற்கொண்டுள்ளதாக. | ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மாநகர சபை நிதிக் நிர்வாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக உத்தரவுகளிற்கான இலக்கம் 2155/6 கொண்ட 2019 திசெம்பர் 24 திகதி அதி விஷேட வர்த்தமானி | (i) வர்த்தமானியின் 62 ஆம் உத்தரவு பிரகாரம் மாநகர சபை நிதியத்திற்கு நடைமுறை ஆண்டிற்கு வருமான மூலங்களான ஆதனங்களை இனங்காண்பதற்கான கணிப்பீடொன்றை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை ஒவ்வொறு ஆண்டும் மார்ச் முப்பத்தி ஓராம் திகதிக்கு முன்னர் சமர்பிக்கப்பட வேண்டிய போதும் சபை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆண்டில் 48 பிரிவுகளில் 19 பிரிவுகளின் கணிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2023 ஜுன் 06 திகதிக்கு எஞ்சிய பிரிவுகளின் கணிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுத் தருமாறு எழுத்து மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அங்கீகார ஆளணியில் 39 வருமான பரிசோதகர்களில் 15 பேர்கள் மாத்திரம் சபையில் கடமை ஆற்றுவதால் உரிய தினத்தில் கணிப்பீட்டு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாதுள்ளதாக. | உரிய தினத்தில் கணிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருமான மூலங்களான ஆதனங்களை இனங்காணல் மற்றும் அதன் பிரகாரம் வருமானத்தை சேகரித்துத் கொள்ள முன்நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) வர்த்தமானியின் 428 ஆம் உத்தரவு பிரகாரம் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்ய வேண்டிய போதும் அதன் பிரகாரம் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2020 திசெம்பர் 31 திகதிக்கு சபையின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் சொத்துக்கள் மீள் மதிப்பீட்டை 2022 ஆண்டில் மேற்கொள்வதாக குறிப்பிட்டுள்ள போதும் 2022 திசெம்பர் 31 திகதிக்க் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்கள் மீள் மதிப்பீட்டை 2024 ஆண்டு மேற்கொள்வதாக குறிப்பிட்டிருந்தது. அதன் பிரகாரம் சொத்துக்கள் மீள் மதிப்பீட்டை ஒவ்வொரு ஆண்டும் பிற்போடுவதால் சொத்துக்களின் சாதாரண பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டு இருக்வில்லை. | சரியான கிரயத்துடன் நாளாதுவரையாக்கிய சொத்துக்கள் பதிவேடொன்று சபையிடம் இல்லாததால் சொத்துக்கள் மீள் மதிப்பீட்டை ஆரம்பித்துள்ளதுடன் மீள் மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் நாளாதுவரையாகிய நிலையான சொத்து பதிவேடொன்றை தயாரித்து, அந்த பெறுமானத்தின் மீது 2023 ஆண்டு இறுதிக் கணக்கிற்கு உள்ளடக்கி 2024 ஆண்டு முதல் சொத்துக்களை பெறுமானத் தேய்விடவும், அதனை நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதாகவும் தயவுடன் அறிவிக்கிறேன். மேலும் இந்த விடயங்களை நிதிக்கூற்றுக்களில் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களிற்குரிய கொள்கையின் கீழும் வெளிப்படித்தியுள்ளதாக | சொத்துக்களின் நியாயமான பெறுமானத்தை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க ஆதனங்களை மீள் மதிப்பீடு செய்து கணக்கிடலை மேற்கொள்ள வேண்டும். |

### 1.7.2 வரித் தேவைபாடுகளிற்கு இணங்காமை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஆண்டு 2016 ஜுலை 01 முதல் 2020 மார்ச் 31 வரையான காலத்திற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட வரி அறிக்கை பிரகாரம் 2023 மே 04 திகதிக்கு செவுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 897,143,592 ஆனதுடன் அந்த வரியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கனணித் தொகுதியை தேவைக்கு ஏற்றவாறு தயாரித்துக் கொள்ள கால தாமதமானமை மற்றும் குறித்த அனைத்து தகவல்களையும் கனணிக்கு உட்படுத்தியிருக்காமை போன்ற விடயங்களின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் தீர்க்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக. | வரி நிலுவையை தீர்த்துக் கொள்ளவதனை துரிதப்படுத்த வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,905,893,767 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் சபையின் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 570,693,595 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | (i) சபையினால் பேணிச் செல்லும் 05 நடைமுறை கணக்குகளிற்குரிய ரூபா 177,425,672 ஆன நேரிடி செலவு வைத்தல் அல்லது போலியான செலவு வைத்தலையும் ரூபா 25,509,347 ஆன நேரடி வரவு வைத்தல் அல்லது போலியான வரவு வைத்தலையும் இனங்காண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நேரடி செலவு வைத்தல்களில் இருந்து 2023.03.31 திகதிக்கு ரூபா 72,351,250 தொகையை தீர்த்து நேரடி அல்லது போலியான வரவு வைத்தல் பெறுமதியில் இருந்து ரூபா 3,898,787 ஆன பெறுமதியினதும் குறித்த கொடுக்கல் வாங்கல்கள் தீர்க்கப்பட்டுள்ளன.<br><br>எஞ்சிய இனங்காண முடியுமான மீதிகளை இனங்கண்ட தீர்க்கவும், இனங்காண முடியாத மீதிகளை அங்கீகாரத்தின் பின்னர் கணக்குகளில் சீராக்கவும் குறித்துக் கொண்டதாக. | நேரடி அல்லது போலியான வரவு வைத்தல் மற்றும் செலவு வைத்தல்களை இனங்கண்டு விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) நடைமுறை கணக்குகள் 03 இல் வைப்புச் செய்யப்பட்ட போதும் தீர்வை செய்யப்படாத ரூபா 1,014,644 ஆன 46 வைப்புக்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக பரீட்சித்து குறித்த பிரிவிற்கு அறிவுறுத்தி எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக. | தீர்வை செய்யப்படாத காசோலைக்களிற்கு உரியதாக பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர முதல்வரால் முன்வைக்கப்பட்ட விபரங்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக் மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப் பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப் பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்ப ட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூ. மில்லியன் | ரூ. மில்லியன் | ரூ. மில்லியன் | ரூ. மில்லியன் | ரூ. மில்லியன் | ரூ. மில்லியன் | ரூ. மில்லியன் | ரூ. மில்லியன் |
| (i) | வீதவரியும் வரியும் | 5,090.4 | 4,306.7 | 4,113.9 | 4,368.2 | 4,960.5 | 4,093.9 | 3,806.1 | 4,235.1 |
| (ii) | வாடகை | 335.8 | 271.9 | 175.6 | 1,177.8 | 238.1 | 297.7 | 228.5 | 1,149.9 |
| (iii) | அனுமதிப்ப த்திரக் கட்டணம் | 85.7 | 65.7 | 65.7 | - | 220.7 | 39.4 | 39.4 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 2,367.2 | 1,336.7 | 655.3 | 681.4 | 4,458.9 | 2,536.2 | 2,348.9 | 368.7 |
| | மொத்தம் | 7,879.1 | 5,981.0 | 5,010.5 | 6,227.4 | 9,878.2 | 6,967.2 | 6,422.9 | 5,753.7 |

### 2.3.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 5,160,501,000 ஆனதுடன் ஆண்டில் பில்லிடப்பட்ட வீதவரி வருமானம் ரூபா 4,178,035,388 ஆனது. வீதவரி வருமானத்தை சரியாக மதிப்பிடப்பட்டு இருக்காததுடன் பில்லிடப்பட்ட வருமானத்தில் ரூபா 3,679,678,051 மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தது. சேகரிப்கப்பட்ட வீதவீரயினுள் முன்னைய ஆண்டுகளிற்குரிய நிலுவைத் தொகையும் உள்ளடங்குவதால் வீதவரி சேகரித்தல் பலவிதமான மட்டத்தில் காணப்பட்டது. | 2022 ஆண்டிற்காக வீதவரியாக ரூபா 4,044,860,249 அறவிட்டுள்ளதுடன் அதனுள் 2021 ஆண்டில் கிடைத்த ரூபா 365,182,199.00 ஆன முற்பணத் தொகையும் உள்ளடங்குகிறது. வீதவரி அறவீட்டை உயர்த்த தனிப்பட்ட ஆதனங்களை தடை செய்தல் வீட்டுக் கட்டிட தொகுதி அன்மித்த நடமாடும் நிகழ்ச்சித் திட்டம் நடாத்துதல் SMS ஊடாக அறிவுறுத்தல் செய்தல் அரச ஆதனங்களிலிருந்து நிலுவை வீதவரி அறவிட நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றை செய்து வருவதாக. | நிலுவை வீதவரி அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2022 ஆண்டிற்காக 35 திரைப்பட மண்டபங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 31,664,911 ஆன நிலுவை களியாட்ட வரித் தொகையை அறவிட 2023 பெப்ரவரி 13 திகதி வரையும் சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2022 ஆண்டின் ஆரம்பத்தில் நிலவிய ரூபா 31,664,911 ஆன நிலுவை திரைப்பட மண்டப வரியிலிருந்து 2023.04.30 திகதிக்கு ரூபா 10,329,605.02 ஆன தொகையை அறவிட்டுள்ளதுடன் எஞ்சிய நிலுவையை அறவிட சட்ட நடவடிக்கை எடுப்பதாக குறித்த திரைப்பட மண்டபங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக | விரைவில் நிலுவை களியாட்ட வரியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையினால் நீண்ட கால அடிப்படையில் வெளித் தரப்பினரிற்கு குத்தகை வழங்கியுள்ள ஆதணங்களை ஐந்து ஆண்டுகளிற்கு ஒரு முறை மீள்மதிப்பிட்டு குத்தகை வாடகையை அதிகரிப்பதற்காக உடன்படிக்கை செய்திருந்த போதும் அவ்வாறு குத்தகை வாடகையை திருத்தி இருக்கவில்லை. | ஆவணப்படுத்தப்பட்டுள்ள வரி ஆதனங்களின் எண்ணிக்கை 53 ஆகும். வாடகை திருத்தியுள்ள ஆதன எண்ணிக்கை 19 ஆகும். எஞ்சிய 34 ஆதனங்களில் 26 ஆதனங்களின் வாடகையை திருத்துவதற்காக நகர மதிப்பீட்டு திணைக்களத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 08 ஆதனங்களில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருவதாக. | குத்தகை உடன்படிக்கை பிரகாரம் குத்தகை வாடகையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவன பட்டியல் பிரகாரம் கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல்கள், தங்குமிடங்கள் மற்றும் உணவகங்கள் 378 காணப்பட்ட போதும் அவற்றை 93 இனை மாத்திரம் இணங்கண்டு இருந்ததுடன் அவற்றில் 18 நிறுவனங்களிலிருந்து அனுமதிப் பத்திரக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எஞ்சிய 275 நிறுவனங்கள் தொடர்பாக பரிசோதித்து செயற்பட்டு வருவதாக அல்லது செயற்படாது இருப்பதாக ஏனும் உறுதி செய்து கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி எதிர்காலத்தில் வருமானப் பரிசோதகர்கள் ஊடாக கணிப்பீடொன்றை மேற்கொண்டு குறித்த நிறுவனங்களின் பட்டியலை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுப்பதாக. | சரியான கணிப்பீடொன்றை மேற்கொண்டு நாளாதுவரை ஆக்கப்பட்ட நிறுவன பட்டியலொன்றை பேணிக் கொள்ள மற்றும் உரிய அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | அறிவித்தல் பலகை காட்சிப்படுத்தல் தொடர்பாக இலக்கம் 1713/10 மற்றும் 2011 ஜுலை 05 திகதி உப விதியின் 26 ஆம் பிரிவு பிரகாரம் செல்லுபடியான அனுமதிப் பத்திரங்கள் இல்லாது மற்நும் அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நியதிகளிற்கு அல்லது நிபந்தனைகளிற்கு முரணாக அறிவித்தல் விளம்பரபடுத்தல் மேற்கொள்ள முடியாத போதும் பௌதீக பரிசோனையின போது இனங்காணப்பட்ட கட்டணம் செலுத்தாது கொழும்பு 07, 06, 05, 02 பிரதேசங்களில் பல இடங்களில் நிர்மாணிக்கப்பட்ட உள்ளக அறிவித்தல் பலகைகளிலிருந்து | பல காரணங்களினால் 2019 ஆண்டு முதல் அனுமதியற்ற அறிவித்தல்களை அகற்றுவதில் பின்னடைவொன்று இருந்த போதும் தற்போது பல்கலைக்கழக மாணவர்களை ஈடுபடுத்தி கணிப்பீட்டை மேற்கொண்டு தற்போது இனங்கண்டுள்ள அனுமதியற்ற அறிவித்தல் பலகைகளை அகற்றுவதற்கும், பத்திரிகை அறிவித்தல் ஊடாக உரிய அனுமதி இன்றிய அறிவித்தல் பலகைகளை அகற்றும் அறிவித்தலொன்றை விடுவிக்கவும் நடவடிக்கை ஆரம்பித்துள்ளதாக. | உபவிதி பிரகாரம் கட்டணம் செலுத்த வேண்டிய அனைத்து அறிவித்தல் பலகைக் கட்டணம் அறவிடுவதற்கு மற்றும் கட்டணம் செலுத்தாத அறிவித்தல் பலகைகளை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாத்திரம் சபைக்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்த வருமானம் (கடையறைகள் தவிர்த்து) ரூபா 16,009,380 ஆன வருமானமொன்று அறவிடப்படாது கைவிடப்பட்டிருந்தது. | | |
| ஊ) | நகர சபை அதிகார பிரதேசத்தில் அனுமதிப் பத்தரம் விநியோகிக்கப்படாத LED பலகைகள் பாரிய அளவில் நிர்மாணிக்கப்பட்டு இருந்ததுடன் மாதிரி பௌதீக பரிசோதனையின் போது அவ்வாறு தாபிக்கப்பட்டிருந்த 03 LED பலகைகளில் இருந்து மாத்திரம் ரூபா 2,645,000 ஆன வருமானம் ஒன்று சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | LED அறிவித்தல் பலகைகள் மீதான தரவு சேகரித்துள்ளதுடன் உரிமையாளர்களினால் அனுமதிப்பத்திர கட்டணம் மிக அதிகமானது என அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கொடுப்பனவை மேற்கொள்ளுமாறு எழுத்து மூலம் அறிவித்துள்ள போதும் கொடுப்பனவை புறக்கணித்தல் அல்லது நிவாரண நிலையை கவனத்திற்கு எடுப்பதற்காக உரிய அறிவித்தல் பலகை உரிமையாளர்கள் தகவல் வழங்காத காரணத்தால் அந்த அறிவித்தல்களை அகற்றுவதற்கு ஆரம்பித்துள்ளதாக. | சட்ட ரீதியான முறைமை ஒன்றின் கீழ் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | 2020 மார்ச் மாதத்தில் கொவிட் தொற்று நிலைமை காரணமாக மூடப்பட்டிருந்த மோதர எலிஹவுசில் அமைந்துள்ள சத்துடு பூங்காவை 2023 மே 15 திகதியளவிலும் மக்களின் பாவனைக்காக பயன்படுத்தி இருக்காததுடன் மூடப்பட்டிருந்த பூங்காவின் ஆளணியினருக்கு 2022 ஆண்டிற்காக சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவாக கூட்டுத்தொகை ரூபா 9,179,904 ஆன விளைவற்ற செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உபகரணங்கள் மிக பழமை ஆனதால் (35 ஆண்டுகளை விட) நிதி செயற்குழுவின் பரிந்துரை பிரகாரம் புதிய முறைமையொன்றின் கீழ் தனியார் பிரிவை தொடர்புபட்டுக் கொண்டு சத்துடு பூங்காவை செயல்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. முக்கிய பராமரிப்பு காவல் சேவை நடவடிக்கைகள் மற்றும் சுத்திகரிப்பு நடவடிக்கை ஊழியர்களினால் மேற்கொள்ளப்படுவதால் சம்பள செலவு விளைவற்ற செலவொன்று இல்லையென. | மக்களின் பயன்பாட்டிற்காக விரைவில் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
